Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 23-2-1985 சனிக்கிழமை (மாசி 12-ஜ ஆகிர் 2) முழக்கம் 19

## பிரஜைகள் குழு செயலாளரின் வீடு திடீர் ராணுவ முற்றுகை

நல்லூர் வைமன் வீதியிலுள்ள யாழ் பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி ஆர் பாலசுப்பிரமணியத்தின் இல்லம் நேற்று மாலை திடீரென ராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டது. திருநெல்வேலி குமாரசாமி வீதியிலுள்ள சோதிடர் ஒருவரின் இல்லத்திற்கு இளைஞர் ஒருவரைத் தேடி சென்ற ராணுவத்தினர், அவர் பிரஜைகள் குழுச் செயலாளர் இல்லம் சென்றதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அங்கு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. சுமார் அரைமணி நேரம் அங்கு சோதனையை மேற்கொண்டதுடன், அங்கு நின்ற வேறு சிலரையும் அவர்கள் விசாரணைக் குட்படுத்தினராம். பிரஜைகள் குழுச் செயலாளரிடம் கேள்விக்கணைகள் தொடுக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

# புளியங்குளம் கண்ணிவெடி விபத்தில் ஜீப்பில் சென்ற இன்ஸ்பெக்டரும் ஆறு பொலிசாரும் பலி

(வவுனியா)

வவுனியா மாங்குளம் வீதியிலுள்ள புளியங்குளம் என்ற இடத்தில் நேற்று நடைபெற்ற கண்ணிவெடி விபத்தொன்றில் ஜீப் வண்டியில் பிரயாணம் செய்த மொத்தம் எட்டுப் பேர் ஸ்தலத்திலேயே பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் ஒருவர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் என்றும், ஆறு பேர் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் என்றும், எட்டாவது நபர் பொலிஸ் நிலைய விகிதர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள பொலிஸ் நிலையமொன்றில் கடமையாற்றும் இவர்கள், சம்பளப் பணத்தைப் பெறுவதற்கு வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் புளியங்குளத்துக்கு அண்மையில் நிலத்துக்கு அடியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி வெடித்ததால், ஜீப் பலத்த சேதத்துக்குள்ளானதாகவும், அதற்குள்ளிருந்த எட்டுப்பேருமே கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

# முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ஞானச்சந்திரன் கடத்தப்பட்டார்

## பஸ்ஸில் கூட வந்த திட்டமிடல் மேலதிக பணிப்பாளரும் கடத்திச் செல்லப்பட்டார்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் தமது மகள் சுபோதினியுடன் நேற்றுக் காலை முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் விசுவமடுவுக்கும் பரந்தனுக்குமிடையில் புளியம்பொக்கணை என்ற இடத்தில் வைத்து ஆயுதம் தாங்கிய இனம் தெரியாத இளைஞர்களால் வானொன்றில் கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே பஸ்ஸில் அரசாங்க அதிபருடன் பிரயாணம் செய்த முல்லைத்தீவு திட்டமிடல் மேலதிக பணிப்பாளர் திரு. கிருபாலகனும் கடத்திச் செல்லப்பட்டார். பின்னர் அவர் விடுவிக்கப்பட்டதாகத் தகவல்கள் கிடைத்துள்ளபோதிலும், இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மூதூர் ஆகிய இடங்களில் முன்னர் நீதவானகப் பணியாற்றிய திரு. ஞானச்சந்திரன் முல்லைத்தீவு அரசாங்க அதிபராகவும், மாவட்ட அமைச்சின் செயலாளராகவும் கடந்த சில வருடங்களாகப் பணியாற்றி வருகின்றார்.

இவரைக் கடத்தியவர்கள் யார் என்பதும், எதற்காகக் கடத்தினர்கள் என்பதும் எவருக்கும் அறிவிக்கப்படவில்லை.

இவர் கடத்தப்பட்டது பற்றி மகள் கிளிநொச்சி அரசாங்க அதிபரை நேரில் சந்தித்து முறையிட்ட பின்னர், கிளிநொச்சிப் பொலிஸிலும் புகார் செய்துள்ளார். இது பற்றித்

—4ஆம் பக்கம் பார்க்க

## இன்று சம்பளமும் பென்ஷனும்

குருநகர் இலங்கை வங்கிக் கிளையில் இன்று கச்சேரி ஓய்வூதியகாரர்களுக்குப் பெஷனும், இன்றும் நாளையும் ஆசி

— 4-ம் பக்கம் பார்க்க

### ஊழியர்கள் ஆட்சேப நடவடிக்கை:

## வேலணை கூட்டுறவுச் சங்க தலைவர் கடத்தப்பட்டார்!

(வேலணை)

வேலணை பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. என். பாலச்சந்திரன் நேற்று முன்தினமிரவு இனம்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கடத்தப்பட்டதை ஆட்சேபித்து மேற்படி சங்கத்தின் தலைமை அலுவலகம், கிராமிய வங்கி உட்பட சகல கிளைகளும் நேற்று மூடப்பட்டிருந்தன.

இதனால் பொதுமக்கள் சிரமம் அடைகின்ற போதிலும், தங்கள் தலைவர் எதுவித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்படும்வரை. மேற்படி சங்கத்தில் விற்பனை எதுவும்நடைபெறாது என்று சங்கத்தின் பிரதான உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

### ★ பிந்திய செய்தி

ஊர்காவற்றுறையிலுள்ள வீடொன்றில் வேலணை கூட்டுறவுச் சங்கத் தலைவர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அப்போது எவருக்கும் தெரியாது அவர் தப்பிச் சென்று விட்டதாகவும் ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

### அகதிகள் மத்தியில் அமைச்சர்

## ஈழப் பிரச்சினையில் இந்திய அரசு உன்னிப்பான கவனம்

(ராமேஸ்வரம்)

இலங்கைப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டு இராமேஸ்வரம் மண்டபம் முகாம்களில் உள்ள தமிழ் அகதிகளை இந்திய சமூகநலத்துறை அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் நேற்றுப் பார்வையிட்டார். மண்டபம் முகாம் அகதிகளுக்கு அரிசி, புடவை, வேட்டி, பால், பருப்பு ஆகியனவற்றை அவர் வழங்கினர்.

இலங்கைச் சிக்கலில் தப்பி இராமேஸ்வரத்திற்கு நேற்று வந்து சேர்ந்த அகதிகளையும்

—4ம் பக்கம் பார்க்க

### பிரஜைகள் குழுக் கூட்டத்தில் யாழ் ஆயர் பேச்சு:

## எதிர்கால சந்ததியினரைப் பாதிக்கவிடாது இளைஞர் கட்டுப்பாட்டுடன் நடக்க வேண்டும்

"நாம் இக்கட்டான நிலையில் இன்று வாழ்கின்றோம். பல கஷ்டங்களின் மத்தியில் இருந்து நமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையையிட்டு கவலை கொண்டுள்ளோம், நமது சொந்த விருப்பப்படி செயற்படாமல் எமது வருங்கால சந்ததியரைப் பாதிக்காது எதையும் வழிவகுக்க வேண்டும். இன்றைய நேரத்தில் இப்பிரஜைகள் குழு ஆற்றும் சேவையைப் பாராட்ட வேண்டும்" என்று யாழ். ஆயர். அதி. வண. பி. தியோகுப்பிள்ளை நேற்று நடைபெற்ற வடபகுதி பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

யாழ். பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி ஆர், பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வண. தியோகுப்பிள்ளை

—4-ஆம் பக்கம் பார்க்க

## சூடுபட்டு இருவர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் மீன்

—4-ஆம் பக்கம் பார்க்க

### சரத் முத்தெட்டுவேகம பேச்சு

## அரசியல் தீர்வின் மூலமே பிரச்சினையைத் தீர்க்கலாம்

"அவசரகாலச் சட்டம் இந்நாட்டு முற்போக்குச்சக்திகள், அறிவாளிகள், தொழிலாளிகள் ஆகியோருக்கு எதிராகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது என்று கலவான தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான

—4ஆம் பக்கம் பார்க்க

### எம். ஜி. ஆருக்கு ராஜீவ் காந்தி அறிவிப்பு:

## கடலோர பாதுகாப்பைப் பலப்படுத்த மத்திய அரசு உடன் நடவடிக்கை!

(சென்னை)

பாரத கடலாதிக்க எல்லைப் பகுதியில் கடலோர காவல் படையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படும் என்று பிரதமர் திரு ராஜீவ் காந்தி தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம ஜி இராமச்சந்திரனுக்கு அனுப்பிவைத்துள்ள செய்தி ஒன்றில் உறுதியளித்திருக்கிறார்.

தமிழக மீனவர்கள் மீண்டும் இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து மாநில அரசு போன்றே மத்திய அரசும் கவலைகொண்டுள்ளது என்றும் பிரதமர் இச்செய்தியில் கூறியிருக்கிறார்,

மாண்ட மீனவர் குடும்பங்களுக்குத் தலா 3000 ரூபா

—4-ம் பக்கம் பார்க்க

## இந்திய அமெரிக்க உறவுகள் வாஷிங்டனில் தங்கியுள்ளது

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்குவது இந்திய அமெரிக்க சுமுக உறவுகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ளது. வாஷிங்டனது கொள்கைகளைப் பொறுத்தே அமெரிக்க இந்திய உறவின் எதிர்

—4ம் பக்கம் பார்க்க

சமூக நலன்விரும்பிகளின் கண்டுபிடிப்பு:

# வெளிநாட்டுக் குடிவகை இல்லாமையால் கசிப்பு, கள்ளச்சாராயம் விற்பனை கூடுகிறது

(உடுப்பிட்டி)

வடமராட்சி பகுதியிலுள்ள வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி ஆகிய இடங்களின் வெளிநாட்டுக் குடிவகை விற்பனை நிலையங்கள் கடந்த சில மாதங்களாக மூடப்பட்டிருப்பதால் அவை சட்டத்திற்கு விரோதமான முறையில் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தவறியதுடன் கள்ளச் சாராயம், கசிப்பு போன்றவற்றை சமூகத்தில் அறிமுகமாக வழிவகுத்துள்ளன எனக் கருதி அவற்றின் உத்தரவுச் சீட்டுகளை ரத்துச் செய்ய வேண்டுமெனக் கோரி வழக்கு ஒன்று தாக்கல் செய்வதில் வடமாரட்சிப் பகுதியின் சில கட்டத்தரணிகள் நடவடிக்கை ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடன் இவர்கள் ஏற்கனவே தொடர்பு கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

அத்துடன் இவற்றின் அனுமதி உத்தரவை இப்பகுதியிலுள்ள கூட்டுறவுச்சங்கங்கள் அல்லது தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களிற்கு வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்கள் பயன்பெறுவதுடன் கள்ளச்சந்தைகளையும் ஒழிக்க முடியும் எனவும் கசிப்பு போன்றவற்றை பாவனையிலிருந்து அழிக்க முடியும் எனவும், பனஞ்சாராயத்தையும் சமூகத்தில் அறிமுகப்படுத்த முடியும் என்றும் உள்ளூர் நலன் விரும்பிகள் கருதுகின்றனர்.

## புதிய கட்டடம்

(உடுப்பிட்டி)

துன்னாலை தெற்கு மக்களின் நலன் கருதி கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ சங்கம் இப்பகுதியில் புதிய கிளைக் கட்டடம் ஒன்றை நிறுவ இருக்கிறது. அத்துடன் ஓங்கு இரண்டு லட்சம் ரூபா செலவில் உரக்களஞ்சியம் ஒன்றையும் இது ஸ்தாபிக்கவுள்ளது. இதற்கான அடிக்கல்லை சங்கத்தின் தலைவர் திரு. த. சிதம்பரபிள்ளை அணமையில் நாட்டி வைத்தார்.

## மக்களின் அன்றுட வாழ்க்கை இன்று அவலமாகியுள்ளது

(சுண்டுக்குளி)

''வீதிகளில் போக்குவரத்துச் செய்யும் அப்பாவிப் பொது மக்களின் உயிருக்குப் பாதுகாப்பளிக்கப்பட வேண்டியது அவசியம். அண்மைக் காலங்களில் நிகழ்ந்து வரும் அகால மரணங்கள் பொதுமக்களின் அன்றுட வாழ்வையே அவலமாக்கியுள்ளது. எனவே நாம் மிகவும் அவதானமாக நடந்து கொள்வதின் மூலமே வீணன மரணங்களையும், இழப்புக்களையும் தவிர்த்துக் கொள்ள முடியும்'' என்று சட்டத்தரணி திரு. க. வைரவநாதன் ஜே. பி. கோப்பாய் தெற்கு இருபாலைப் பிரஜைகள் குழுப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பாடசாலை மாணவர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், வர்த்தகர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், கூட்டுறவுப் பணியாளர் தமக்குச் சொந்தமான வாகனங்களில் செல்ல அனுமதிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கோருவதென்று இக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. பொதுமக்களுக்கு உதவும் முகமாகப் பிரஜைகள் குழுத் தொண்டர்களை நியமிப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. அ. செல்லத்துரை இறைவழிபாட்டின் மூலமே எமது கஷ்டங்களுக்குப் பரிகாரம் காணமுடியும் என்று வலியுறுத்தினர்.

## பாதிப்புற்ற மாணவருக்கு ஆசிரியர், மாணவர்கள் உதவி

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் வறுமை நிலையில் உள்ள மாணவ, மாணவியர்க்கு மேற்படி வித்தியாலய ஆசிரிய, ஆசிரியைகளும், பழைய மாணவர்களும் இணைந்து அரிசி, மா முதலான உணவுப் பொருட்களை பல்வேறு வழிகளிலும் சேகரித்து இலவசமாக புதன் கிழமைமுதல் விநியோகித்து வருகின்றனர்.

இவ்வித்தியாலயத்தில் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் கல்விகற்ற போதிலும் குறிப்பாக மீனவர் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளே கூடுதலாக கல்வி பயில்கின்றனர். இக்குடும்பங்கள் இன்றைய நிலையில் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளதாலேயே இம் முன்மாதிரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள், ஊர்மக்களும் இத்திட்டத்திற்கு உதவுகின்றனர்.

இத்திட்டத்தைச் சீருறச் செயற்படுத்தும் வகையில் மேற்படி வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் திரு என். தில்லைச்சிற்றம்பலம், திரு எஸ். கணேசமூர்த்தி, திரு. எஸ். இராஜரத்தினம் ஆகியோர் குழுவாக இணைந்து அதிபர் திரு சி. அப்புத்துரையின் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

## மக்கள் வெளியேற்றம்

(காரைநகர்)

காரைநகர் கடற்படை முகாம் அமைந்துள்ள சுற்றுடலில் வசிக்கும் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இரண்டொரு தினங்களாக டிராக்ரர்களிலும் லொறிகளிலும் மக்கள் தமது தளபாடங்களையும், உடைமைகளையும் ஏற்றிச் சென்றதைக் காணக்கூடியதாயிருந்தது. எந்த நேரத்திலும் தமது உயிருக்கும் உடைமைகளுக்கும் ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே மக்கள் இவ்வாறு வெளியேறுவதாகக் கூறப்படுகிறது.

## சைக்கிள் இலக்கத் தகடுகள் பெறுவது பெரும்பாடு

(மிருசுவில்)

மிருசுவில், கச்சாய் உட்பட அனேக அபிவிருத்திச்சபை உப-அலுவலகங்களில் சைக்கிள் இலக்கத் தகடுகளுக்கு தற்போது தட்டுப்பாடு நிலவுகின்றது. சைக்கிளுக்குரிய இறைவரிப் பணத்தைச் செலுத்தி இலக்கத் தகடுகளைப் பெறுபவர்களுக்கே இப்பர்மிட் வழங்கப்படுவதினால் வழமையைவிட அதிகமானோர் இம்முறை சைக்கிள் இலக்கத்தகடுகளைப் பெற்றிருப்பதாகவும் இதனாலேயே இத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால் இறைவரிப்பணத்தைச் செலுத்துபவர்களுக்கு தற்போது பற்றுச்சீட்டு மட்டுமே வழங்கப்படுவதாகவும் புதிய இலக்கத்தகடுகள் வந்து சேர்ந்ததும் அவர்களுக்குத் தகடுகள் வழங்கப்படுமெனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.




✳ யாழ், டேவிற் வீதி பேரின்பநாயகம் சரோஜினிதேவி தம்பதிகளின் மகன் கிங்ஸ்லி சுபாஸ்கரன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்,

✳ தெல்லிப்பளை செல்லத்துரை லலிதாமலர் தம்பதிகளின் மகள் றணிற்ரு இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்,

✳ ஆனைக்கோட்டை முகுந்தராசா தவராணி தம்பதிகளின் மகன் துஷ்யந்தன் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்,

✳ காவலூர் அன்ரனி பேக்மன்ஸ் சுசிலா தம்பதிகளின் மகள் பிரியா இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ யாழ், சென் செபஸ்ரியன் லேன் டொனல் ராணி தம்பதிகளின் மகன் ரமேஸ் இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்,

✳ நவாலி தெற்கு சிவலிங்கம் இரட்னேஸ்வரி தம்பதிகளின் மகன் நிமலராஜ் இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ திருநெல்வேலி பஞ்சலிங்கம் சரோஜினிதேவி தம்பதிகளின் மகள் கம்ஷவாகினி இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ பலாலி தெற்கைச் சேர்ந்த சிவரத்தினம் புவனேஸ்வரி தம்பதிகளின் மகன் ஜெயராம் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்,

## பணமின்றித் திண்டாட்டம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு தபால் நிலையத்திற்குப் போதியளவு பணம் வராமையால் இங்கு காசுக் கட்டளை, தபாற்கட்டளை ஆதியனவற்றிற்குரிய பணக் கொடுப்பனவுகளை உடனுக்குடன் வழங்க முடியாதநிலை யேற்பட்டுள்ளது.

வெளியிடங்களிலிருந்து அனுப்பப்படும் காசுக்கட்டளை, தபாற் கட்டளை ஆதியனவற்றை மாற்றிப் பணம் பெறுதற்குச் சம்பந்தப்பட்டோர் பல நாட்கள் காத்திருக்க நேரிடுகிறது. தந்தி, தொலைபேசி சேவைகள் எதுவும் இங்கில்லை. முத்திரைகள் விற்பனை மட்டுமே முக்கிய வேலையாக இங்கு நடைபெறுகிறது. இதனால் போதிய வருமானம் கிட்டுவதாயில்லை.

தென்னிலங்கை தேர்வுப் பரீட்சை

## யாழ்ப்பாணத்திலேயே நடத்துமாறு கோரிக்கை

(சரசாலை)

வெளிவாரிப் பல்கலைக் கழக கலைமுதற் தேர்வுப் பரீட்சையை, இவ்வருடம் பேராதனை, மாத்தறை, கொழும்பு பல்கலைக்கழகங்களில் நடத்த வேண்டியுள்ளது என தமிழ் மாணவர்களுக்கு பரீட்சை பகுதியினர் அறிவித்துள்ளனராம்.

இதனால் வெளிவாரிப் பல்கலைக்கழக மாணவர்கள் பெரிதும் கவலைகொண்டுள்ளனர். மேற்படி பரீட்சையை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடத்த சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் என்று மேற்படி மாணவர்கள் கோருகின்றனர்.

உணவுத் தட்டுப்பாடு

## இப்போது நீங்கிவிட்டதாக உணவு அதிகாரி அறிவிப்பு

வடமராட்சிப் பகுதியில் அண்மையில் நிலவிய சீனி, மா, பருப்பு முதலிய உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு நீங்கிவிட்டது. இவற்றைப் போதியளவு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி இனி மேலும் இப்பகுதியில் இவ்வாறு தட்டுப்பாடுகள் ஏற்படாது நடவடிக்கைகள் எடுக்கப்படும் என யாழ் உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. சீ. பற்குணம் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற மாநாட்டில் தெரிவித்தார்.

பருத்தித்துறை உதவி அரசாங்க உதிபர் திரு. வை. வேலும்மயிலும் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் பருத்தித்துறை பிரஜைகள் குழு பிரதிநிதிகள், பருத்தித்துறை புலோலி பகுதி கூட்டுறவுச்சங்க முகாமையாளர்கள், கலந்து கொண்டனர். யாழ். கூட்டுறவு மொத்த விற்பனை முகாமையாளர் திரு. கந்தசாமி பேசுகையில், வடபிராந்திய கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் இந்த உணவுப் பொருட்கள் தாராளமாக இருப்பதால் தனியார் துறை வர்த்தகர்கள் உட்பட சகலருக்கும் வழங்க முடியும் என்றார்.

பருத்தித்துறை பிரஜைகள் குழு. யாழ். அரசாங்க அதிபருக்கு விடுத்த முறைப்பாட்டையடுத்து இம்மாநாடு கூட்டப்பட்டது.

## இராப்பொழுதில் சீரான வீதி

(சரசாலை)

சாவகச்சேரி – கண்டி வீதி இரவுப்பொழுதில் இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி ஒன்றினால் குண்டு, குழிகள் நிரப்பப்பட்டு சீராக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### விற்கவும்-வாங்கவும்

கல்குலேட்டர்கள்– தலைமயிர் உலர்த்திகள்– தையல்மெசின் மோட்டர்கள்– மணிக்கூட்டு வகைகள் வாங்கவும் விற்கவும் தினமும் வாருங்கள் ஏலவிற்பனை நிலையம், கோப்பாய்.







**EUROLANKA TRAVELS AND TOURS LTD.**

✳ யாழ்ப்பாண மக்களின் வசதியை முன்னிட்டு கொழும்பில் தலைமை அலுவலகத்தைக் கொண்டிருக்கும் எமது ஸ்தாபனம் இப்பொழுது யாழ். நகரிலும் எமது கிளையை ஆரம்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உலகின் எல்லாப் பாகங்களும் பேர்லின் (BERLIN) உட்பட, மற்றெல்லா ஸ்தாபனங்களையும்விட மிகக் குறைந்த விலையில் விமான டிக்கட்டுகள் பெற்றுக் கொடுக்கப்படும்,

BERLIN கட்டணம்:

AIR LANKA சேவையில் 14,800/- மட்டுமே
(வியன்னு வழியாக)

AEROFLOT சேவையில் 14,000/- மட்டுமே
(மொஸ்கோ வழியாக)

எமது சேவையின் விபரங்கள்;

1. உங்கள் பயணம் முடியும் வரைக்கும் எமது பிரதிநிதிகளின் 24 மணி நேர ஒத்துழைப்பு.
2. பிரயாணக்காசோலைகள் (TRAVELLERS CHEQUE) எடுத்துக் கொடுப்பதற்கான இலவச சேவை.
3. விமான ஆசனப் பதிவுகள் (CONFIRMATION) மற்றும் சகல பிரயாண தேவைகளும் செய்து கொடுக்கப்படும்.
4. கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையம் செல்வதற்கான போக்குவரத்துச் சேவை.

மேலும் விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்:

**EURO LANKA TRAVELS LTD.**
40, 3rd. Cross Street, JAFFNA.

தலைமை அலுவலகம்:

**EURO LANKA TRAVELS & TOURS LTD**
6A, Daisy Villa Avenue. COLOMBO–4.
Telephone: 585990, 589992

## உதய சிந்தனை

எவன் தன்னைத்தானே ஜெயித்தவனே அவன் தனக்குத்தானே உறவினன்: ஆனால் தன்னை ஜெயிக்காதவனுக்குத்தானே பகைவனைப்போல் பகைமை நிலையில் உள்ளவனாவான்.

- பகவத் கீதை

37, கஸ்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 23336

## இதய ஒலி

23-2-85 சனிக்கிழமை (இரத்தாக்ஷி மாசி 12)

# இங்கே நடப்பது இரண்டு போராட்டம்

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, தியாகமே உருவான பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தினம் தினம் தம் உயிரைப்பணயம் வைத்துப் போராடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், அவர்கள் பெயருக்கே களங்கம் ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் சில கோஷ்டிகள் இறங்கியுள்ளமை பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் அடைந்து வரும் கஷ்டங்கள், இன்னல்கள் பகிரங்கமானவை.

தனிநபர் கொள்ளைகள், பொது நிறுவனக் கொள்ளைகள், கூட்டுறவுச் சங்கக் கொள்ளைகள் போன்றவற்றை வன்மையாகப் பல தடவை நாம் கண்டித்துள்ளோம்.

பல்வேறு இயக்கங்களும் கூட இக் கொள்ளைகளைக் கண்டித்தும், மறுத்தும் அறிக்கைகளை விட்டுள்ளன.

ஆனாலும் இக்கொள்ளைகள் தடுக்கப்பட்டுள்ளனவா? இக் கொள்ளையர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனரா?

இல்லையென்றே சொல்ல வேண்டும்.

அதற்குப் பதிலாக பணயக் கைதிகளாகக் கடத்திச் செல்லப்பட்ட பலரைப் பற்றிய தகவல்களே கிடைக்கவில்லை. பதிலாக பல சடலங்கள் அங்குமிங்குமாகக் காணப்பட்டுள்ளன.

கொள்ளைகளைக் கண்டித்தும், அபகரித்த பொருட்களை மீளத் தருமாறும் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களை எவராவது கவனத்தில் எடுக்கிறார்களா?

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மின்சார சேவையையே ஸ்தம்பிதமடையச் செய்யும் நடவடிக்கைகள் பற்றி சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் நீண்ட அறிக்கையொன்றை விடுத்திருந்தார்.

கடந்த வருடப் பிற்பகுதியில் திடீரென அமுலுக்கு வந்த அவசரகால விதிகளால் யாழ்ப்பாணத்தின் வீதித் திருத்த வேலைகளுக்குத் தடைவந்தது.

இதற்கென ஒதுக்கப்பட்ட நிதியை நிறுத்துமாறு அரசாங்கம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் அரசாங்கசெயலக அதிகாரிகள் ஒன்று சேர்ந்து, மதிநுட்பமாகத் திட்டமிட்டு, வீதித்திருத்த வேலைக்கு ஒதுக்கிய முழுப்பணத்தையும், மின்சார அபிவிருத்தி வேலைகளுக்கு மாற்றம் செய்தனர்.

சுமார் ஐம்பது லட்சம் ரூபா செலவில் மின்னிணைப்பு அபிவிருத்தி வேலைகள் ஆரம்பமாகின. அதன் தொடர் வேலையாக மேலும் பல லட்சம் ரூபா வேலைகள் இவ்வாண்டில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் விவசாயச் செய்கை, சிறுகைத் தொழிற்சாலைகள் ஆகியன முழுக்க முழுக்க மின்சக்தியையே நம்பியிருப்பதை விளக்க வேண்டிய தேவையில்லை.

ஆனால் பல லட்சம் ரூபா மின் உபகரணக் கொள்ளைகளால் ஆரம்பிக்கப்பட்ட சகல வேலைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையடிக்கப்பட்டுள்ள பொருள்கள் மீளக் கையளிக்கப்படாவிடின் மின் அபிவிருத்தி வேலைகள் நடைபெறாதென்றும், எவ்வழியிலாவது அவைகளைத் திருப்பித்தருமாறும் அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஏற்கனவே இருளடைந்திருக்கும் தமிழ் மக்கள் வாழ்க்கை, இருளினில்மூழ்கவேண்டிய நிர்ப்பந்தம்இதனால்ஏற்படுமென்பதை கொள்ளையர்கள் உணரமாட்டார்களா?

பாடசாலைகளின் கொள்ளைகளையும், கல்வியைச் சீர்குலைப்பதையும் சகல அமைப்புகளும் வன்மையாகக் கண்டித்து வரும் இவ்வேளையில், யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் இரண்டு லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்தவர்கள் யார்?

ஏழை மாணவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணத்தையும், ஆசிரியர்களின் சம்பளப் பணத்தையும் கல்லூரி அதிபரும். உப அதிபருமான மதகுருமார் மன்றாடிக் கேட்டபோதும் மனமிரங்காதவர்கள், நிச்சயமாக புனித இயக்கங்களைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியாது.

கல்லூரி மாணவமணிகளின் நெஞ்சத்தை உருக்கும் வேண்டுகோளைக் கூட காதுகளில் போட்டுக் கொள்ளாதவர்கள், யாருக்காகப் போராட முன் வந்துள்ளார்கள்?

இனத்தின் விடிவுக்காகப் போராடும் இயக்கங்களுடன் போராடும் பிற்போக்கு நாசகாரக் கும்பல்களைக் கண்டு பிடிப்பதற்காகவாவது, சகல இயக்கங்களும் ஒன்று சேரக் கூடாதா என்று பொதுமக்கள் அங்கலாய்க்கிறார்கள்.

சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கவனத்துக்கு எடுப்பது மிக மிக அவசியமாகும்;

---

ராஜஸ்தானில் நீதி விசாரணைக்கு உத்தரவு

# முதல்வருக்குஊறுவிளைவிக்க முயன்ற வேட்பாளர் கொலை

(ராஜஸ்தான்)

ராஜஸ்தான் மாநிலத்தில் சுயேச்சை வேட்பாளர் ஒருவர் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையானதான சம்பவம் ஒன்றும் அதற்கு முன்னதாக கொலையுண்டவர் ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் மாத்தூரவை ஆபத்துக்குள்ளாக்க மேற்கொண்டதான சம்பவமும் இம் மாநிலத்தை மட்டுமல்ல முழு பாரதத்தையுமே பரபரப்பிலும் அதிர்ச்சிலும் ஆழ்த்தியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. நீதிவிசாரணைக்கு மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

புதன்கிழமையன்று தீப் தொகுதியில்சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்திருந்த மான்ஸிங் என்பவர் ஹெலிகொப்டரில் முதலமைச்சர் பயணம் செய்ய முற்பட்ட வேளை ஹெலிகொப்டர் மீது தான் செலுத்தி வந்த ஜீப்பை மோதி விபரீதம் விளைக்க முனைந்தாராம். முதலமைச்சர் தெய்வாதீனமாக உயிர்தப்பினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பொலிசார் இவரைக் கைது செய்ய சென்ற போது இவர் பொலிசாரை நோக்கிச் துப்பாக்கியால் சுடத் தொடங்கினாராம். பொலிசாரும் திருப்பி தற்பாதுகாப்பின் பொருட்டுச் சுடவே மான்ஸிங் சூடுபட்டு சுருண்டு விழுந்து மடிந்தாராம். இச் சம்பவ வேளை மான்ஸிங்கின் ஆதரவாளர் இருவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகவும் மருத்துவமனைக்கு விரைகையில் இருவரதும் ஜீவன் பிரிந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மான்ஸிங் மரணமான சம்பவம் குறித்த சூழ்நிலை பற்றி நீதிவிசாரணை நடத்துமாறு மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் இவ் விசாரணையை நடத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க, பிரதமர் திரு. ராஜீவ்காந்தி இறந்தவர் குடும்பங்களுக்குத் தனது இரங்கலைத் தெரிவித்துக் கொண்டுள்ளார். துரதிர்ஷ்டவசமான சூழ்நிலையில் சம்பவித்த மரணங்கள் எனவும் பிரதமர் கூறியிருக்கிறார்.

# றீகன்-பிரிட்டிஷ் பிரதமர் மூன்றுமணி நேர சந்திப்பு

## மிகவும் நல்ல பலன் என அறிவிப்பு

(வாஷிங்டன்)

தற்போது அமெரிக்க விஜயம் மேற் கொண்டுள்ள பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மார்கிரெட் தட்ச்சர் அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகனுடன் மூன்று மணித்தியாலங்கள் நடத்திய பேச்சு வார்த்தைகள் நல்ல பலனளிப்பனவாக இருந்தன என்று இரு தரப்பிலும் தெரிவிக்கப்பட்டது.

ஜெனிவாவில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள அமெரிக்க சோவியத் யூனியன் ஆயுதப் பரிகரணம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் குறித்தும் இருவரும் ஆராய்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இருதரப்பு பொருளாதார உறவுகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளன.

ராஜத்துரோக குற்றச்சாட்டு

# தென்னபிரிக்காவில் எழுவர் மீது விசாரணை நிகழ்கிறது

(லண்டன்)

தென்னபிரிக்காவில் ஏழு பேர் மீது ராஜத்துரோகக் குற்றச்சாட்டின் பேரில் விசாரணை நடைபெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் சமீபத்தில் நிகழ்த சம்பவங்களில் 180 கறுப்பு இனத்தவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இனரீதியான வன்முறையை எதிர்ப்பதில் நோபல் பரிசு பெற்ற மேற்றிராணியார் டுடுவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

## ரோமில் இஸ்ரேல் பிரதமர் பெரஸ்

(ரோம்)

இஸ்ரேலியப் பிரதம மந்திரி திரு. சிமொன பெரஸ் தனது இருநாள் ரோம் விஜயத்தின் போது மத்திய கிழக்குப் பிரச்சினையில் தனது நாட்டின் நிலைப்பாடு பற்றி எடுத்துரைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி அறிவிப்பு

# 1987-ம் வருடத்துக்கு முன் பதவிவிலகும் எண்ணமில்லை

(மணிலா)

தான் 1987ம் ஆண்டுக்கு முன் பதவி விலகப் போவதாகக் கூறப்படும் வதந்தியை பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திரு. மார்க்கோஸ் மறுத்துள்ளார்.

அவர் உடல்நலம் குன்றியிருந்தமையால்முன்னதாகவே பதவி விலகக்கூடும் என்று ஊகம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது எதிர்க்கட்சிகள் பரப்பியுள்ள வதந்தி, மக்கள் மனதில் சந்தேகத்தை உண்டுபண்ணும் நோக்கமே இது என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி தேர்தலில் தான் மீண்டும் போட்டியிடப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இந்திரா அறக்கட்டளை

(புதுடில்லி)

அன்னை இந்திரா காந்தியின் நினைவாக அவர் பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அறக்கட்டளையின் முதல் தலைவராக பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

அன்னையின் கொள்கைகளை நிலை நாட்டவும் ஏழைகளுக்கு உதவவும் மற்றும் பல நல்ல திட்டங்களை உள்ளடக்கியதாகவும் இது செயற்படவுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

# ‘பாரதம் முழுவதுமே அமைதி நிலவ வழிகோல வேண்டும்’

(புதுடில்லி)

பஞ்சாப்- அஸாம் மாநிலங்களில் மட்டுமல்ல முழு பாரதத்திலுமே அமைதி நிலவ வேண்டும் என்பதனையே தான் விரும்புவதாகப் பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்தி புவனேஸ்வரில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

பஞ்சாப் பிரச்சினையில் அரசியல் சாசனத்திற்கு உட்பட்ட வகையிலான தீர்வு அவசியம் என மீண்டும் வலியுறுத்திய பிரதமர், இது தொடர்பாக அகாலி தள்ளிடம் இருந்து பதிலேதும் வரவில்லையே என வருத்தம் தெரிவித்தார்.

## சண்டை

(லண்டன்)

தாய்லாந்து எல்லையில் புதிதாக சண்டை மூண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# அணுசக்தி மின் நிலையங்கள் பார்வையிட ரஷ்யா அனுமதி

(மாஸ்கோ)

சோவியத் யூனியன் தனது அணுசக்தி மின்நிலையங்கள் சிலவற்றை சர்வதேச மேற்பார்வைக்கு அனுமதிக்கும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் வியன்னாவில் கைச்சாத்தானது. இந்த ஒப்பந்தம் ஜெனிவாவின் கிழக்கு மேற்குப் பகுதியில் ஆயுதக் கட்டுப்பாட்டிற்கு அனுகூலமான சூழ்நிலையை உருவாக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 1500 பேர் காவலில்

(இஸ்லாமாபத்)

பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 1500க்கும் கூடுதலான எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் கைதாகியுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமட்டும் அரசு எதிர்ப்பாளர்கள் முந்நூறுபேர் கைதாகினராம்.

ஈழமுரசு

## பரீட்சையைக் குழப்புபவர்கள் சமூகவிரோதிகள் என்கிறது 'ரெலா'

அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் ஜீ சீ ஈ. பரீட்சையை எக்காரணம் கொண்டும் எவரும் இடையூறு செய்யக்கூடாது என்றும், குழப்புவோர் சமூகவிரோதிகளாகவே மக்களால் கணிக்கப்படுவர் என்றும் தமிழீழ விடுதலை இராணுவம் (ரெலா) விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது மாணவச் செல்வங்கள் இராப்பகலாக இரண்டு வருடங்கள் ஊண் உறக்கமின்றி சிரமப்பட்டுக் கல்வி கற்று பரீட்சை எழுதும்போது அதனைக் குழப்பினால் அவர்களின் நம்பிக்கையும் எதிர்கால எதிர்பார்ப்பும் நாசமாகிவிடும் எனவும், இதனால் எமது விடுதலைப் போராட்டத்திற்கு உருவாகும் சிந்தனையாளர்களை இழக்கவேண்டிய ஒரு நிலையை உண்டுபண்ணாமல் தடுப்பது நமது கடமையென்றும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் அறிக்கை :

# உயிர், உடைமையை பாதுகாப்பதற்கு அவசரகால நிலை நீடிப்பது அவசியம்

(கொழும்பு)

அவசரகாலச்சட்டத்தைமேலும்ஒருமாதத்திற்குநீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. பாராளுமன்ற அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் வின்சன்ட் பெரேரா இப்பிரேரணையைச் சமர்ப்பித்தார்.

அமைச்சர் அங்கு உரையாற்றுகையில், சட்டத்தையும் ஒழுங்கையும் பேணவும், உயிரையுமஉடைமையையும் பாதுகாக்கவும் அவசரகால நிலைமை மேலும் நீடிக்கப்படுவது அவசியம் என்று சொன்னார். இந்த மாதம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பல கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பயங்கரவாதிகள் பல மக்களை கொன்றிருக்கிறார்கள். மின்கம்பங்களில் கட்டப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

பயங்கரவாதிகள் இப்போது ஆயுதப்படையினருக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த மாதம் 152 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன, இவற்றில் 52 கொள்ளைச் சம்பவங்களாகும் தனிப்பட்ட நிறுவனங்கள், வாகனங்கள் கொள்ளையடிக்கப்பட்டவற்றில் அடங்குகின்றன.

யாழ்ப்பாணத்தில் எட்டுப்பேர் கொல்லப்பட்டார்கள். வவுனியாவில் ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். வவுனியாவிலும், மட்டக்களப்பிலும் பத்தொன்பது குடிமககள் கொல்லப்பட்டார்கள். திருகோணமலையில் ஒன்பது சம்பவங்கள் இடம்பெற்றன. யாழ்ப்பாணத்தில் ஒரு இலட்சத்து இருபதெண்ணாயிரம் ரூபா பெறுமதியுள்ள மின்சார உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளன இந்தக் காலப் பகுதியில நான்கு பௌஸர்களும் ஒரு அம்புலன்ஸ் வண்டியும் கடத்திச் செல்லப்பட்டன.

"அமைச்சர் வின்சன்ட் பெரேரா மேலும் பேசுகையில் இந்த காலகட்டத்தில் நாட்டின் இறைமையையும், ஐக்கியத்தையும் பாதுகாக்க சகல அரசியல் கட்சிகளும் ஒன்று சேர வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

நீர்வேலி ப. நோ. கூ. சங்க

## கொள்ளைப் பொருட்கள் வானில் திரும்பி வந்தன

(நீர்வேலி)

கடந்த மாதம் இருபத்தெட்டாம் திகதி நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து ஆயுதமுனையில் கொள்ளையடிக்கப்பட்ட சீனி ரின் பால், பால்மாவகை சவர்க்காரம்ரின் மீன் முதலான பொருட்கள் இருபத்தோராம் திகதி காலை மினி வான் ஒன்றில் வந்த எட்டு இளைஞர்கள் அடங்கிய கோஷ்டி ஒன்றினால் மேற்படி சங்கத்திடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேற்படிச் சங்கத்திற்கு வந்த பிரஸ்தாப இளைஞர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் முகாமையாளரைச் சந்திக்க முதலில் அனுமதி கேட்டனர் என்றும் பின்னர் கடந்த மாதம் இங்கிருந்து கொள்ளையடிக்கப் பட்ட பொருட்களை ஒப்படைக்கப் போவதாகவும் கூறி அங்கிருந்த சிலரது உதவியுடன் வானில் இருந்த பொருட்களை இறக்கி, பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் ஒப்படைத்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஈழ அகதிகள் இதுவரை 6752

இம்மாதம் இலங்கையிலிருந்து இதுவரை 6752 அகதிகள் வந்துள்ளனரென்றும் அவர்களுள் 3500 பேர் மற்ற மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர் குருமூர்த்தி நேற்றுத் தெரிவித்தார்

## புதிய ஒலிபரப்பு

(மிருசுவில்)

தற்போது புதிதாக மேலும் ஒரு இரகசிய ஒலிபரப்பு ஆரம்பிக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்டு வருகின்றது 'தமிழ் ஈழ முழக்கம்' என பெயரிடப்பட்டு அழைக்கப்படும் இவ் ஒலிபரப்பு சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய வார நாட்களில் தினமும் இரவு 8மணி முதல் 8 45 வரை சிற்றலை 75 மீற்றர் 4461 கிலோஹேட்ஸ் அலைவரிசையில் ஒலிபரப்பப்படுகிறது.

குறுக்கீடுகள் இருந்த போதிலும் நிகழ்ச்சிகளை தெளிவாக செவிமடுக்க முடிகின்றது. தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் 'அன்றாட நிகழ்ச்சிகள்' இவ் ஒலிபரப்பில் செய்தியறிக்கை மூலம் உடனுக்குடன் ஒலிபரப்பப்படுகின்றது.

கடத்தப்பட்ட இரு பொலிஸ்

## இன்ஸ்பெக்டர் மனைவியரின் இறுதியான வேண்டுகோள்

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் வைத்துக் கடத்தப்பட்ட இரண்டு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களின் மனைவியரும் இறுதி வேண்டுகோள் ஒன்றினை நேற்று விடுத்தனர்.

கடத்தப்பட்ட பொலிஸார் நலன்களைக் கவனிக்க உருவாக்கப்பட்ட நலன்புரிச் சங்கத்தின் ஊடாக கடத்தியவர்களிடம் இவர்கள் விடுத்த வேண்டுகோளில் தமது கணவன்மாரை விடுவிப்பதற்காக குறைவான ஒரு தொகையை வழங்க தாம் இணங்குவதாகவும், நடுவர் ஒருவர் மூலம் இதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தத் தாம் விரும்புவதாகவும் தெரிவித்துள்ளனர்.

தமது கணவன்மார் தீங்கு எதுவும் விளைவிக்காது, நல்ல உடல் நலத்தோடு வைத்திருக்கப்படுவதாக மனைவியர் திட நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆனால் தாங்களும், பிள்ளைகளும் மிகப் பெரும் மன நெருக்கடிக்கு ஆளாகி வருகின்றமையால், காருண்ய, மனிதாபிமான அடிப்படையில் கணவர்மாரை விடுதலை செய்யுமாறு இருவரும் கேட்டுள்ளனர்.

## பகல் நேரக் கொள்ளை

ஆனைப்பந்தி நீர் வழங்கல் வடிகால் சபை அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை பத்து மணிக்கு, இனம் தெரியாத ஆறு பேர் புகுந்து அங்கிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள், கருவிகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக யாழ். பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## தற்காலிக வேலை நீக்கம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த வர்த்தக சேவை பணிப்பாளர் ஒருவரும், மற்றும் நான்கு ஊழியர்களும் ஊழல் குற்றச்சாட்டொன்று தொடர்பாக நேற்றுக் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

### எதிர்கால சந்ததி...

—1-ஆம் பக்கத் தொடர்

மேலும் பேசுகையில், மன்னாரில் கடந்த முப்பதாம் திகதி நடைபெற்ற சம்பவம், ஐந்து நாட்களின் பின்னரே மன்னார் மேற்றிராணியார் கொடுத்த கடிதமூலம் எனக்குத் தெரிய வந்தது. அதன்பின்னரே மற்றைய இடங்களுக்குத் தெரிய வந்தது தொலைபேசி மற்றும் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு இவை நடைபெறுவதால் மற்றைய இடங்களுக்கு அவை தெரிவதில்லை நமது இளைஞர்கள் கட்டுப்பாடு இன்று ஒருவரின் வழிநடத்தலின்றி தமது விருப்பப்படி நடக்கிறார்கள் என்பது கவலைக்குரியது.

மீண்டும் இப்பரீட்சை நமது பிள்ளைகளுக்கு நடப்பதை நாம் வரவேற்க வேண்டும்'' என்றார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி பேசுகையில் "சிவில் நிர்வாகம்இல்லாததால்இப்பகுதியில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை விளக்கிக்கூறினார்''

இக்கூட்டத்தில் சகல பகுதி பிரஜைகள் குழு பிரதிநிதிகளும கலந்து கொண்டு தத்தமது பகுதி சம்பவங்களை, நிலைமைகளை எடுத்துக் கூறினார்கள்.

யாழ் பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி பாலசுப்பிரமணியம் பேசுகையில், அண்மையில் கொழும்பில் தாம் அமைச்சர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மகா சங்கத்தினர், சகோதர இயக்கங்களுடன் தமது நிலைமையை எடுத்துக் கூறியதாகவும், பேச்சுவார்த்தைகள் நடாத்தவில்லை என்றும் கூறினார்.

சில பகுதிகளில் தமிழ் மக்களை வெளியேறும்படி உத்தரவிடப்பட்டதையும், சிலரை குடியமர்த்த அரசு எடுக்கும் நடவடிக்கைகளையும் இக்கூட்டத்தில் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது,

நடைபெறவுள்ள க. பொ. த பரீட்சையை அமைதியாகவும், நல்லமுறையிலும் நடக்க எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் எனபலரும் வேண்டுகோள் விடுத்தனர்.

### ஈழப்பிரச்சினை...

—1-ஆம் பக்கத் தொடர்

அமைச்சர் பார்வையிட்டார். இராணுவத்தினரின் கொடுமைகளுக்கு அஞ்சி உடைமைகளை விட்டுவிட்டு உயிரோடு தாம் மட்டும் வந்ததாகவும் வயலில் விளைந்துள்ள பயிர்களை அறுவடை செய்யக்கூட தம்மால் முடியவில்லையெனவும் அகதிகள் அமைச்சரிடம் தெரிவித்தனர். இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டு சேதத்துக்குள்ளான படகுகளையும் அமைச்சர் பார்வையிட்டார்.

இதற்குப் பின்னால் நிருபர்களிடம் பேசிய அமைச்சர் மரகதம் சந்திரசேகர் இலங்கையின் பிரச்சினையை இந்திய மத்திய அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது என்றும் இலங்கையில் இருந்து வரும் அகதிகளை தமிழ் நாடு அரசு நன்கு பராமரிக்க ஆவன எல்லாவற்றையும் அது அளிக்கும் என்றும் தெரிவித்தார்.

### இந்திய அமெரிக்க...

—1-ஆம் பக்கத் தொடர்

காலம் உள்ளது எனப் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி கூறியுள்ளார்.

அமெரிக்க தினசரியான ''லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ்'' க்கு அளித்த பேட்டியொன்றில ராஜீவ் காந்தி மேலும் குறிப்பிடுகையில் பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் வழங்குவது எப்போதும்ம பிரச்சினையானது என்றும் இவ் ஆயுதங்கள் இந்தியாவிற்கு எதிராக பயன்படுத்தப்படுவதை வழமையாகக் கண்டு வந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதற்கிடையே ராஜீவ்காந்தி அமெரிக்க அரசின் அழைப்பை ஏற்று ஜூன் 11ம் திகதி முதல் 4 நாள் அங்கு விஜயம் செய்ய விருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### சம்பளமும்...

— 1-ஆம் பக்கத் தொடர்

ரியர்களின் சம்பளப் பணமும் வழங்கப்படும் என்று இலங்கை வங்கிமுகாமையாளர் திரு எம். கனகரத்தினம் தெரிவித்தார்.

### கடலோர பாதுகாப்..

—1 ஆ-ம் பக்கத் தொடர்

உதவியளிக்கப்படும் என்று கூறியுள்ள பிரதமர் இலங்கையில் இருந்து தமிழகம் வரும் அகதிகளுக்கு நிதியுதவி அளிக்கப்படும் என்றும் முதல்வருக்கு உறுதியளித்துள்ளார்.

கடலோரக் காவல் படையின் காவல் மேலும் தீவிரமாக்கப்பட வேண்டும் என மத்திய அரசு உத்தரவிட்டுள்ளதாகவும் இலங்கை அரசுடன் இக் கொடூரத் தாக்குதல் குறித்து தொடர்பு கொள்ளப்பட்டுள்ளதாக இச் செய்தியில் கூறப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து முதலமைச்சர் தனக்கு அனுப்பிய 'டெலெக்ஸ்' செய்திக்கு அனுப்பியுள்ள பதிலிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

### சூடுபட்டு...

—1 ஆ-ம் பக்கத் தொடர்

ஏற்றி வந்த லொறியொன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதால் தேவராஜன், மாணிக்கவாசகர் ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

### முல்லைத்தீவு...

—1-ஆம் பக்கத் தொடர்

தகவல் தெரிந்தவர்கள் யாழ்ப்பாணம் அல்லது கிளிநொச்சி அரசாங்க அதிபர்களிடம் தெரிவிக்கலாமென்று அரசாங்கச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

அரசாங்க அதிபர் கடத்தப்பட்ட செய்தி நேற்று முற்பகல் வெளியானதைத் தொடர்ந்து கண்டுக்குளியில் அவரது மனைவியும் பிள்ளைகளும் வசிக்கும் வீட்டுக்குப் பெரும் தொகையானோர் சென்று நிலைமையை அறிவதில் அக்கறை காட்டினர். அவரது குடும்பத்தவர்கள் ஆழ்ந்த கவலையுடன் அழுதவாறு இருப்பதைக் காணக் கூடியதாகவிருந்தது.

இருதய நோயாளியான திரு. ஞானச்சந்திரனை மனிதாபிமான ரீதியில் விடுதலை செய்ய வேண்டுமென்று அவரது நண்பர்களும், உறவினர்களும் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### அரசியல் தீர்வின்...

—1-ஆம் பக்கத் தொடர்

திரு. சரத் முத்தெட்டுவேகம நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியல் தீர்வொன்றின் மூலமே இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கலாம் என்றும் திரு. சரத்முத்தெட்டுவேகம இவ்விவாதத்தின் போது எடுத்துக் கூறினார்,

தேசியபத்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அதுலத்முதலி இவ்விவாதத்தில உரையாற்றுகையில், பயங்கரவாதிகளை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டிக்கத் தவறியது ஏன் எனக் கேட்டார். எதிர்க்கட்சிகள் ஆரம்பத்திலிருந்து பயங்கரவாதிகளுக்கு ஆதரவளித்து வந்திருப்பது இப்பொழுது தெளிவாகத் தெரிகிறது எனவும் அவர் கூறினார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது பற்றிய பிரேரணை 126 வாக்குகளைப் பெற்று நிறைவேறியது. கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரான சரத் முத்தெட்டுவேகம மட்டும் இதனை எதிர்த்து வாக்களித்தார் சுதந்திரக்கட்சியும். மக்கள் ஐக்கிய முன்னணியும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப்பகுதியில் 23-02-1985 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336;